# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1832/24 - 2013 ඔක්තෝබර් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.10.17

*1832/24 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்

**மத்திய மாகாண மாகாண சபை**

கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 13 வது அரசியல் சாசனத்தின் திருத்தப்பட்ட 154 (ஆ) சரத்தின் 10(அ) துணைவிதியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகார தத்துவங்களின்படி மத்திய மாகாண ஆளுநர் டிகிரி பண்டா கொப்பேகடுவ ஆகிய நான், மத்திய மாகாண சபையின் ஆறாவது சபையின் இரண்டாவது சபைக் கூட்டம் 2013, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பள்ளேகளை மாகாண சபை நிர்வாகக் கட்டிடத் தொகுதியின் மத்திய மாகாண சபையின் கருமபீடத்தில் மாகாண சபை அமர்வு கூட்டப்படும் என்பதையும் அந்த சபையில் நான் உரையாற்றுவேன் என்பதையும் அறிவித்துக் கொள்கிறேன்.

டிகிரி பண்டா கொப்பேகடுவ,<br>ஆளுநர்,<br>மத்திய மாகாணம்.

ஆளுநர் செயலகம்,<br>கண்டி,<br>2013, ஒற்றோபர் 07.

11 - 111

---

**மத்திய மாகாண சபையின் ஆறாவது சபையின் முதலாவது சபை அமர்வைக் கூட்டுதல் பற்றிய அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 13 வது அரசியல் சாசனத்தின் திருத்தப்பட்ட 154 (ஆ) சரத்தின் 8 (அ) துணைவிதியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகார தத்துவங்களின்படி மத்திய மாகாண ஆளுநர் டிகிரி பண்டா கொப்பேகடுவ ஆகிய நான், 2013, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பள்ளேகளையில் அமைந்துள்ள மத்திய மாகாண சபை நிர்வாக சபை கேட்போர் கூடத்தில் மாகாண சபை அமர்வு கூட்டப்படும் என்பதையும் அதற்காக அழைப்பு விடுவிக்கப்படுகின்றது என்பதையும் இத்தால் பகிரங்க அறிவித்தல் மூலம் அறியத்தருகின்றேன்.

டிகிரி பண்டா கொப்பேகடுவ,<br>ஆளுநர்,<br>மத்திய மாகாணம்.

ஆளுநர் செயலகம்,<br>கண்டி,<br>2013, ஒற்றோபர் 04.

11 - 112



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.